Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 03 புதன்கிழமை (16-04-1997) - UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 139

# வவுனியாவில் அகதிகளுக்கு இனிமேல் நிதிஉதவி இல்லை!

## யாழ்ப்பாணம் செல்லும்படி நெருக்குவதற்கு புதிய திட்டம்

கொழும்பு, ஏப்ரல் 16

வவுனியா அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வடபகுதி அகதிகளுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த நிதி உதவியை உடனடியாக நிறுத்துவது என முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்குப் பதிலாக அவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் மட்டும் இனிமேல் வழங்கப்படும்.

'யாழ். மாவட்டத்துக்குத் திரும்பிச் செல்ல மாட்டோம்; தென்னிலங்கைக்கு அல்லது நாட்டின் வேறு பகுதிகளுக்கே செல்வோம்'- என்று அடம் பிடித்து வரும் மக்களை யாழ்ப்பாணத்துக்குச் செல்ல இணங்க வைக்கும் ஒரு நடவடிக்கையாகவே புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.

யாழ். குடாநாட்டின் மீதும் வன்னிப் பகுதிகள் மீதும் ஸ்ரீலங்காப் படைகள் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்த பின்னர் — வவுனியாவுக்குள் வருவதற்கு அரசு தரப்பில் விதிக்கப்பட்டிருந்த தடைகள் கடந்த ஒக்ரோபரில் நீக்கப்பட்ட பின்னர் — வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த சுமார் 60 ஆயிரம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை ரயில் தடம் புரண்டது

கொழும்புகோட்டை ரயில் நிலையத்திலிருந்து நேற்றுக் காலை 7.15 மணிக்கு திருகோணமலை நோக்கிப் புறப்பட்ட பயணிகள் ரயில் பிற்பகல் 1.45 மணியளவில் கெக்கிராவைக்கு அப்பால் தடம் புரண்டது. பயணிகளுக்கு பெரும்பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. ரயில் தடம்புரண்டதால் அப்பாதையூடான ரயில் போக்குவரத்து தடைபட்டது. (இ-3)

## இன்றும் நாளையும் கப்பல் சேவைகள்

யாழ்ப்பாணம், ஏப். 16

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்றும், நாளையும் பயணிகள் கப்பல் சேவை இடம் பெறவிருப்பதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்று 790 பயணிகளும், நாளை 500 பயணிகளும் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல்இலக்கம்560க்கு உட்பட்டவர்கள் இன்று காலை 7 மணிக்கு யாழ்.ரயில் நிலையத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பட்டியல் இலக்கம் 540க்கு உட்பட்டவர்கள்பயணம்செய்வதற்கு கடைசித் தினம் இன்று என்றும்—

இன்று அவர்கள் பயணம் செய்யாதுவிட்டால் அவர்களின் பதிவுகள்ரத்துச் செய்யப்படும் என்றும் —

யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்று அறிவித்தது. (உ-3)

## ஞாயிறு 100 தமிழர் கொழும்பில் கைது!

கொழும்பு, ஏப்.16

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கொழும்பு, நீர்கொழும்புப் பகுதிகளில் மேற்கொண்ட தேடுதல்களின் போது சுமார் நூறு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் வாழும் பகுதிகளிலேயே இத்தேடுதல் நடத்தப்பட்டுள்ளதாகவும்—

கைது செய்யப்பட்டவர்களில் பெண்களும் அடங்குவர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்கள் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என கொழும்பு பத்திரிகை செய்திகள் தெரிவித்தன. (உ-3-150)

### நவீன ஆயுதங்கள் வழங்காததால்

## படைகளுடன் சேர்ந்து புளொட் செங்கலடியில் செயற்படாது!

கொழும்பு, ஏப். 16

மட்டக்களப்பு செங்கலடிப் பிரதேசத்தில் படையினருடன் இணைந்து பணியாற்றிய 'புளொட்' அமைப்பு தனது பணியை வாபஸ் பெற்று விட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக நவீன ஆயுதங்களை வழங்குமாறு விடுத்த கோரிக்கையை அரசாங்கம் ஏற்காததாலேயே தமது சேவையை வாபஸ் பெற்றோம் என்று 'புளொட்' அமைப்பு தெரிவித்தது.

'எமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது கனரக ஆயுதங்கள் இன்றிப் எப்படி அந்தப் பகுதியில் பணியாற்ற முடியும்?' — என்று புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் கேட்டார்.

''செங்கலடி அபாயகரமான பகுதி. தேவையான நவீன ஆயுதங்களின்றி புலிகளின் அச்சுறுத்தலை தடுக்க முடியாது.'' என்றும் அவர் தெரிவித்தார். (உ-3-150)

### ஆயுத விவகாரம்:

## வாசுதேவா எம்.பி. விசாரணையில்!

கொழும்பு, ஏப். 16

நவசமசமாஜக்கட்சிதொழிற்சங்கக்கட்டடத்தில் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமை தொடர்பாக பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம்வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவா நாணயக்கார பொலீஸாரால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

பேலியகொட பொலீஸார் வாசுதேவாவை சுமார் இரண்டு மணித்தியாலங்களாக விசாரணை செய்தனர். பொலீஸார் கைப்பற்றிய ஆயுதங்கள் தொடர்பாக அவரிடம் கேட்கப்பட்டது.

முன்னர் நவசமசமாஜக் கட்சியில் இருந்த வாசுதேவ நாணயக்கார பின்னர் அதிலிருந்து பிரிந்து மீண்டும் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்து கொண்டார் என்பது—

(8 ஆம் பக்கம் பார்க்க)

### திருகோணமலையில் பரபரப்பு!

## கோணேசர் ஆலய பிரதம குருவின் மனைவி எலும்புக்கூடாக மீட்பு!

### தாவடியில் உள்ள கணவரை கைது செய்ய உத்தரவு

திருகோணமலை, ஏப். 16

சுமார் ஒரு வருடத்துக்கு முன் திருகோணமலை கோணேசர் ஆலய பிரதம குருக்களின் விடுதிப் பகுதியில் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் பிரதமகுருவின் மனைவியின் எலும்புக் கூடு நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டது

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதாகக் கூறப்படும் கோணேசர் ஆலய முன்னாள் பிரதம குருக்களை இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாகக் கைது செய்யும்படி திருகோணமலை நீதிவான் உத்தரவிட்டார்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் பிரதம குருக்களாகப் பணியாற்றிய வியாகேஸ்வர சர்மா என்பவரின் மனைவியான அம்பிகா என்பவர் கொலை செய்யப்பட்டார் என்று கிடைத்த முறைப்பாட்டையடுத்து திருகோணமலை நீதிவான் பி. சுவர்ணராஜின் உத்தரவின் பேரில் பதில் நீதிவான் சுபாஜினி வரதன் முன்னிலையில் நேற்றுக் காலை திருகோணமலைப் பொலீஸார் குருக்களின் விடுதிப் பகுதியில் தேடுதல் நடத்தி புதைகுழியைத் தோண்டினர்.

புதைகுழியில் இருந்து மண்டைஓடும், எலும்புகளும்

(8 ஆம்பக்கம் பார்க்க)

## காணாமற் போனோர் பற்றிய விசாரணைகள் ஒத்திவைப்பு

### நாளை ஆரம்பமாகமாட்டா

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி பின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பாக நாளை ஆரம்பமாக விருந்த இரண்டாம் கட்ட விசாரணைகள் திட்டமிட்டபடி நாளை ஆரம்பிக்கப்பட மாட்டாது என்று யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் [illegible] விசாரணைக் குழுவின் விசாரணைகள் நாளை முதல் 3 நாள்களுக்கு பலாலியில் இடம் பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விசாரணைக் குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 3 நாள்களுக்கு நடைபெறும் என்று நேற்று அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகர உறுப்பினர்கள் இரு இடங்களில் பதவியேற்பு

கொழும்பு,ஏப்.16

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் நேற்று நடைபெற்றபோது—

கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் இரு வேறு கோஷ்டிகளாகப் பிரிந்து இரு வேறு இடங்களில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட

(8 ஆம் பக்கத் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை ஆரம்பம்

**விக்னா கல்வி நிறுவனம்**

A/L 98 மாலை நேர வகுப்புகள்

**Acc. திரு. பாலவாசன்**

(ஒப்படை). 2. 00 மணி

**Eco. திரு. விக்கி**

(தேசிய வருமானம்) 3, 00 மணி

**ஆரம்பம்:- 17-04-97** (செவ்வாய், வியாழன்)

முக்கிய குறிப்பு:- அனுமதிகள் வரையறுக்கப்பட்டன. முன் கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(46389)

## மாவட்டக் கூட்டுறவுச் சபை அறிவித்தல்

**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் 7 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 19-4-97 சனிக்கிழமை காலை 10.30 மணி**

மேற்படி சபையின் 7 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் தொடர்பான 07-12-96, 26-12-96 திகதி இட்ட கடிதங்கள் சார்பாக, வருடாந்தப் பொதுக் கூட்டம் 19 - 04 - 97 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இலக்கம் 14, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. தா. கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். அத்தருணம் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பொதுச் சபைப் பிரதிநிதிகளையும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

பிரதிநிதிகளின் பெயர்களை அனுப்பிய அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு அழைப்புக் கடிதம் அவர்களது முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. பிரதிநிதிகளின் பெயரை அனுப்பாத அங்கத்துவ சங்கங்களுக்கு பொதுச் சபைப் பிரதிநிதிகளிடம் கையளிக்குமாறு கடிதங்கள் சங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

சகல அங்கத்துவ சங்கங்களும் தங்கள் பிரதிநிதிகள் தவறாது பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள நடவடிக்கை எடுத்து ஒத்துழைக்குமாறும் அறியத் தருகின்றோம். அழைப்புக் கடிதங்கள் கிடைக்காத சங்கங்கள் சபையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகிறேன்.

14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். — செயலாளர்.

(சி/509)

## 9 ஆம் நாள் நினைவஞ்சலி



யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை சிரேஷ்ட மாணவ தலைவன்

செல்வன்

**கணபதிப்பிள்ளை பிரதீபன்**

(Senior Prefect)

| தாயின் மடியில்: | ஆண்டவன் காலடியில்: |
|---|---|
| 3 — 5 — 1981 | 8 — 4 — 1997 |

"எந்த ஒரு மாணவனும் தன் அயராத முயற்சி ஆக கல்வி கற்றால் அந்த மாணவனுக்கு வெற்றி நிச்சயம் என்ற மணிவாக்கு எந்நாளும் அவன் நாவிலிருந்து உதிர்ந்து கொண்டிருக்கும்"

(பிரதீபனின் வாக்கு)

மகனே பிரதீபன்!

"தர்மம் விழுந்தாலும் தவறியும் உடையாது"

ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு சாதனை புரிந்தாய்
ஒரு நொடியில் ஓடி மறைந்தாய்!
ஒரு நொடியில் நீ மறைந்தாலும்
ஒவ்வொரு நொடியும் உன் நினைவே

உன் நினைவில் வாடும்,
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(9521)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 16

திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீ நீலாயதாட்சி சமேத காயாரோஹணதேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்தொன்பது தினங்கள் நடைபெறும். மே மாதம் 5 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(இ-111)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப். 16

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய ஸ்ரீ ராமநவமியாகமும் திருவிழாவும் இன்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறும்.

நாட்டு மக்களின் நலன் வேண்டி பிரார்த்தனை விசேட பூசை, வழிபாடுகள் என்பன இடம் பெறும்.

(இ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப். 16

கைதடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 12 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதியும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

கரணவாய்வடக்கு எள்ளன்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 11 நாள்கள் இடம் பெறும் உற்சவத்தில் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (உ-15)

**CASIO INSTITUTE**

கல்வியங்காடு

**A/L 97,98,99**

கணக்கியல்

வகுப்புகள் ஆரம்பம்

ஆசிரியர்

**சி. தவா**

புதன் 5. 00 P. M

(46388)

எமது

இன்றைய வெளியீடு

விஜயசாந்தி, ராம்கியின்

அடிமைப் பெண்

சுப்ப ஸோ

(ரவி ஒளி கானம்.)

100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/511)

பொஸ்கோ இன்ஸ்ரிரியூட்

25, றாக்கா றோட், யாழ்ப்பாணம்.

**A/L DAY CLASS**

வரவு செலவுத்திட்டம்

BY.

திரு. விக்கி

ஆரம்பம்: 17 - 4 - 97

காலை 7.45

(46384)

எமது புதிய வெளியீடு

ராம்கி, விஜயசாந்தி நடித்த

அடிமைப் பெண்

அருணாச்சலம் மற்றும் புதிய படங்களின் போஸ்டர்களும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது ஒறிஜினல் வெளியீடுகள்:

★ பொன்னுமணி ★ புலன் விசாரணை
★ கப்டன் பிரபாகரன் ★ மாப்பிள்ளை

**வீடியோ விமல்**

யாழ்ப்பாணம்.

(46387)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை அறிவித்தல்

(1) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர் பிரிவுக்கு பயிற்சியாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை 30-04-97 புதன்கிழமை காலை 10. 30 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும், இப் பயிற்சி நெறிக்கான விண்ணப்ப திகதி 25-04-97 வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் கூட்டுறவுச் சங்கப் பணியாளரும், வெளிவாரி மாணவர்களும், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்று 25 – 04 – 97 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

(2) கடந்த காலங்களில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர் பிரிவு, சாதாரண பிரிவு, கனிஷ்ட பிரிவு பயிற்சி பெற்று பரீட்சையில் சித்தியடையாதவர்கள், பழைய பாடத்திட்டங்களில் பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்வதற்கு வசதியாக தங்கள் விவரங்களை 30-04-97 இற்கு முன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபரிடம் சமர்ப்பிக்கவும்.

— மாவட்டச் செயலாளர்

14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி/510)

## மரண அறிவித்தல்கள்

### ஜோண்பிள்ளை பற்றிக் இராஜசுந்தரம்

நல்லூர் ஆர்சீவாதப்பர் வீதியைச் சேர்ந்த இராஜசுந்தரம் 14-04-97இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி ஜோண்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி மரியாம்பிள்ளையின் மருமகனும், மற்றும் லூர்த்து தவமணியின் அன்புக் கணவரும், மரீஷ ஜெஸ்மின் (திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கடமையாற்றிய ஆசிரியை), காலஞ்சென்ற இராஜினி, மற்றும் மரீன் தர்சினி (திருக்குடும்ப கன்னியர் மட மாணவி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், றக்கா வீதியைச் சேர்ந்த திரு. திருமதி தேவசகாயத்தின் பெறாமகனும், இராஜநாயகம், திருமதி அந்தோனிப்பிள்ளை, திருமதி கென்றி (கொழும்பு), இராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜேசுதாசன், சூசைதாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பில் நல்லடக்கம் செய்யப்படும். இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காகஇன்று (16- 04- 97) புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் 5 மணிக்கு (புதிய நேரம்) இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(46383)

### இராயப்பு சின்னப்பு (சம்மாட்டி)

குருநகரைச் சேர்ந்த இராயப்பு சின்னப்பு (சம்மாட்டி) அவர்கள் 15- 04- 97 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திரேசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராயப்பு தம்பதிகளின் அன்புப் புதல்வனும், மேரிராணி, புஸ்பராணி, யோசேப்பின் (சின்னக்கிளி), உதயா (பிரான்ஸ்), தேவா (பிரான்ஸ்), குட்டி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், செல்வநாயகம், கிறிஸ்ரியன், பிரான்சில் வசிக்கும் யோகநாயகம், ஜெனிற்றா, மெடோனா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரான்சில் வசிக்கும் கெஸ்ரன், றெஜின், நந்தா, பிறின்ஸ்ரன் மற்றும் அனிஸ்ரன், யூயின், நிமெல்டா, நிமல், சோபியா, சுஜி, கமல், சுதர்சன், பிரபாகினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு இன்று (16- 04- 97) புதன்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யூயின்
(பேரன்)

23, பாலுடையார் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

(46390)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் அரசியல் சூழலையே சின்னாபின்னப்படுத்தும்காங்கிரஸ்

## மதசார்பின்மை பற்றி பேச அதற்கு தகுதி கிடையாது

**இந்தியப் பிரதமர் தேவ கௌடா அரசு மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் ஐக்கிய முன்னணி அரசு தோற்கடிக்கப்பட்டது. இதன் பின்னணியில் இந்திய காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகள் பற்றி வெரித்தாஸ் தமிழ்ச்சேவை 12-04-97 இல் வழங்கிய "உண்மையின் எண்ணங்கள்" பகுதியை இங்கு தருகின்றோம்.**

சுதந்திரத்திற்குப் பிந்திய கால இந்திய வரலாற்றில் வன்மையாகக் கண்டிக்கத் தக்கதான, அரசியல்பொறுப்பற்ற தனத்தினை காங்கிரஸ் கட்சி அரங்கேற்றியிருக்கிறது.

ஒரு நாட்டின் பல துறை வளர்ச்சிக்கு அரசின் உறுதி நிலை (Political Stability) மிகவும் அவசியம்.

அத்தகைய உறுதிநிலை மிக மிகத் தேவையாக இருந்த இந்தக் கால கட்டத்தில் எள்ளளவும் தேசியப் பொறுப்புணர்வு இல்லாமல் மது அருந்திய பைத்தியக்காரக் குரங்கின் செயல் போல ஐக்கிய முன்னணி அரசை மட்டுமல்லாது ஒட்டு மொத்த இந்திய அரசியல் சூழலையே காங்கிரஸ் கட்சி சின்னாபின்னப்படுத்தியுள்ளது.

மத்திய நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) —

நீண்டகால முறுகலுக்குப் பின் பாகிஸ்தானுடன் நட்புறவுப் பேச்சுவார்த்தைகள் — என அதி தேசிய முக்கியமான அரசியல் நிகழ்வுகள் இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளையில் காங்கிரஸ் கட்சி நடந்துகொண்டிருக்கும் விதம் பொறுப்பற்றதனம் மட்டுமல்ல, அரசியல் ஒழுக்கம் தவறுதலும், ஒரு வழியில் தேசத்துரோகமும் ஆகும் என்றே கருதுகிறோம்.

வாக்களித்த மக்களை மடையர்கள் என நினைக்கக் கூடாது. என்ன காரணத்துக்காக இவ்வளவு அவசரப்பட்டு ஐக்கிய முன்னணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டார்கள் என்பது சொல்லப்படவுமில்லை; நாட்டுமக்களுக்குவிளக்கப்படவுமில்லை.

ஏதோ ஒப்புக்காக சில காரணங்களைக் கூறியுள்ளனர்.

### காங்கிரஸுக்கு என்ன துணிச்சல்?

மதவாதசக்திகளை ஐக்கிய முன்னணி அரசு உறுதியாக எதிர்கொள்ளவில்லைஎன்பது ஒரு குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்துவதற்கு காங்கிரஸ்காரர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? என்பதுதான் தெரியவில்லை.

இந்தியாவின் நாடாளுமன்றம், உச்சநீதிமன்றம் இரண்டையும் குப்பை என மதித்து ஒருமதவெறிக்கூட்டம் பாபர் மசூதியை இடித்துத்தள்ளிக் கொண்டிருந்தபோது. வேண்டுமென்றே புதுடில்லியில் மூன்று மணித்தியாலங்கள் செத்துக் கிடந்தாரே உங்களது அப்போதைய பிரதமர் நரசிம்மராவ். அப்போதுதான் இந்த ரோசம் காங்கிரஸ்காரர்களுக்கு வந்திருக்க வேண்டும்.

மதச்சார்பின்மையைப் பற்றிப் பேச காங்கிரஸ்காரர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

அதிகார ஆசை, அதிகார வெறி. இவற்றைத் தவிர வேறு ஏதும் காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தலைவர் சீதாராம் கேசரிக்கும் இப்போதைய நெருக்கடியை உருவாக்கியதில் இல்லை என்பது அப்பட்டமான உண்மை.

சுமார் 50 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரத்தை உண்டு, கொழுத்து ருசிகண்ட பூனைகள் காங்கிரஸ்காரர்கள். பழகிய நாக்குக்கு அதிகார ருசி இல்லாமல் இருக்க முடியவில்லைபோல் தெரிகிறது.

சீதாராம் கேசரி பற்றி எழுத்தாளர் பிரேம் சோப்பினா மிகச்சரியாக எழுதியிருந்தார். "அவரைச்சுற்றி மேலான எண்ணிக்கையில் இருக்கிறவர்கள் அதிகாரப் பசியும் குறுக்குத் தந்திரமும் கொண்ட மிகக் கீழான மனிதர்கள்" என எழுதியிருந்தார் அவர்.

இந்தியாவின் வரலாற்றுக்கு கணிசமான பங்கினை நல்கிய கட்சி காங்கிரஸ்கட்சி. அதற்கு ஒரு பெருமை இருக்கிறது. மோதிலால் நேரு, ஜவர்ஹர்லால் நேரு, மௌலானா அபுல்சலாம் அஸாத், பெருந்தலைவர் காமராஜ் ஆகிய மிப்பெரிய மனிதர்கள் அமர்ந்து பெருமை சேர்த்த, அமர்ந்து கனப்படுத்திய காங்கிரஸ் தலைமைப் பொறுப்பில் சீதாராம் கேசரி போன்ற சீர்கெட்ட மனிதர்களும் அமரும் நிலை வந்திருக்கின்றதெனில் அவரைச் சொல்லிக் குற்றமில்லை. அந்தக் கட்சியினுடைய ஒட்டுமொத்த ஆரோக்கிய நிலை அந்த அளவுக்கு கேவலமான நிலையில் இருக்கிறது என்பதுதான் உண்மை.

### அதிகார ஏக போகம்

காங்கிரஸ் கட்சியின் அதிகார ஏக போகமும் அகில இந்திய செல்வாக்கும் இந்தியாவைப் பொறுத்தவரையில் காலாவதியாகிவிட்டன.

இந்தக் கசப்பான உண்மையைக் காங்கிரஸ் உணர்ந்து கொண்டு தன்னைத் தானே மறு சீரமைப்புச் செய்து கொள்ளவில்லை என்றால் அதனுடைய அந்திமகாலமும் அடக்க நேரமும் வெகுவிரைவில் இல்லை, மிக அருகிலேயே இருக்கிறது என்பது தான் உண்மை.

### அவசர அவியல் கூட்டணி

ஐக்கிய முன்னணி ஒன்றும் பெரிய விசேடம் இல்லை. ஐக்கிய முன்னணி ஓர் அவசர அவியல் கூட்டணி. ஆனால் ஐக்கிய முன்னணி காலத்தின் கட்டாயம். இந்தியாவில் பிராந்திய அளவில் எழுந்துவிட்ட தேசிய உணர்வின் வெளிப்பாடுதான் இந்த ஐக்கிய முன்னணி. அது ஒரு முகமான ஒரு வடிவம் பெற இன்னும் காலம் எடுக்கும். என்றாலும் இப்போதைய சூழலை நாம் பார்க்கும் போது காங்கிரஸின் மிரட்டலுக்குப் பணியாமல் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக முன்னர் நரசிம்மராவ் ஈடுபட்டதைப் போல கீழ்த்தரமான பேரங்கள் எதிலும் ஈடுபடாமல் கம்பீரமாய், சில தார்மீக ஒழுக்கங்களின் அடிப்படையில் நின்ற ஐக்கிய முன்னணியினரின் நடத்தை இந்திய அரசியலுக்குப் புதிய நம்பிக்கை தருகிறது எனத் தமிழ்ப்பணி கருதுகிறது.

(இ-10)

## முப்பனார் - கருணாநிதி - சந்திரபாபு நாயுடு பெயர்களும் அடுத்த பிரதமர் பதவிக்கு!

புதுடில்லி ஏப். 16

புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக ஐக்கிய முன்னணி அடுத்த ஞாயிற்றுக்கிழமை கூடுகிறது. தேவகௌடாவின் தலைமை இல்லாத புதிய ஐக்கிய முன்னணி அரசு உருவாவதை ஆதரிக்கப் போவதாக காங்கிரஸ் பகிரங்கமாக அறிவித்துள்ளதை அடுத்து இதன் புதிய தலைவரே இந்தியாவின் அடுத்த புதிய பிரதமர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய முன்னணியின் புதிய தலைவர் பதவிக்கு தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார், தமிழக முதல்வர் மு. கருணாநிதி, ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோரின் பெயர்களும் அடிபடுகின்றன என்று ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பொதுத் தேர்தல்கள் உடனடியாக நடைபெறும் வாய்ப்பில்லை என்பதும் காங்கிரஸ்—பாரதீய ஜனதா அல்லாத மாற்று அரசு ஒன்று அமையும் என்பதும் தற்போது நிச்சயமாகி விட்டது.

இதற்கான முக்கிய படிகள் கடந்த திங்களன்று முடிவுற்றன.

ஐக்கிய முன்னணியின் தலைமைப் பதவியில் இருந்து முன்னாள் பிரதமர் தேவகௌடா இராஜினமா செய்ய முன்வந்துள்ளார். மற்றொருவரின் தலைமையில் அரசு அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என ஐக்கிய முன்னணி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இதனை அடுத்தே ஐக்கிய முன்னணி அடுத்த ஞாயிற்றுக்கிழமை கூடுகிறது.

காஸ்கிரஸ் கட்சி தனது செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் வெளியிட்ட அறிக்கையில், "சமீபத்தில் இடம்பெற்ற கசப்பான அரசியல் நிகழ்வுகளை மறந்து விடுவோம். மதவெறி சக்திகளை முறியடிக்க இணைந்து செயல்படுவோம். நாடாளுமன்றத்தை இப்போது கலைப்பதும் பொதுத் தேர்தல் நடத்துவதும் உசிதமானவையல்ல. மாற்று ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு நல்குவோம்" என தெரிவிக்கப்பட்டது.

புதிய தலைவர் பதவிக்கு கருப்பையா மூப்பனார், சந்திர பாபு நாயுடு, மு. கருணாநிதி ஆகியோரின் பெயர்கள் அடிபடுவதால் இந்தியாவின் புதிய பிரதமர் தென் மாநிலம் ஒன்றைச் சேர்ந்தவர்தான் என்பது உறுதியாகிவிட்டது.

பிரதமர் பதவியை அடைய சந்திரபாபு நாயுடு பெரும் முயற்சிகள் மேற்கொள்கிறார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

அகில இந்தியத் தொடர்புகளும் காஸ்கிரஸ் உயர் மட்ட ஆதரவும் மூப்பனாருக்கு சாதகமாக உள்ளன.

நீண்டகால நிர்வாக அனுபவம் கொண்டவர் என்பது கலைஞர் மு. கருணாநிதியின் பெயரை முன்வைப்பவர்களின் வாதம் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-10)

## காங்கிரஸ் மீது தாக்கு

'ஐக்கிய முன்னணியில் தலைமைப் பதவியில் ஏற்படவுள்ள மாற்றம், எதிர்காலத்தில் ஐக்கிய முன்னணியைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் கட்கியின் நடத்தையை பெரிய அளவில் மாற்றிவிடப் போவதில்லை'

இப்படி மார்ஸிய கம்பியூனிஸ்ட் கட்சித் தலைவரும் பேச்சாளருமான சிதாராம் எச்சூரி தெரிவித்துள்ளார்.

ஓர் அரசியல் நெருக்கடியை உருவாக்கினால் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் ஐக்கிய முன்னணியில் இருந்து விலகி காங்கிரஸ் கூட்டணியில் சேரலாம் என காங்கிரஸ் தலைவர்கள் ஒரு "கனவுச் சூதாட்டம்" நடத்தினார்கள். அந்தச் சூதாட்டம் காங்கிரஸ் கட்சிக்குப் படு தோல்வியில் முடிந்தது. ஐக்கிய முன்னணியை அவர்களால் உடைக்க முடியவில்லைஎன்றுஅவர்கூறினார்.

## தலைநகர் கின்ஸாசா நோக்கி கிளர்ச்சிப்படை முன்னேற்றம்

கின்ஸாசா, ஏப். 16

ஸயர் நாட்டு கிளர்ச்சியாளர்களின் தலைவர் கபீலா கடந்த திங்களன்று லுபுமும்பாஸி நகருக்குச் சென்றார்.

ஆயிரக் கணக்கான மக்கள் ஒன்றுகூடி ஒரு தலைவருக்குரிய வரவேற்பை அவருக்கு அளித்தனர்.

"கபீலா எங்கள் ரட்சகர்" என அவர்கள் கோஷமிட்டனர்.

ஸயரின் மற்றொரு முனையில் கபீலாவின் கிளர்ச்சிப் படைகள் தலைநகர் கின்ஸாசாவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"இதுவரை அனைத்து நகர்களையும் எளிதாகக் கைப்பற்றியது போல கின்ஸாசாவையும் கைப்பற்ற முடியாது. இரத்த வெள்ளத்தில் தான் முடிவு தீர்மானிக்கப்படும்" என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-10)

## சவூதியில் ஈரானியர் ஆர்ப்பாட்டம்

மெக்கா, ஏப், 16

மெக்கா நகருக்குச் சென்ற சுமார் ஐயாயிரம் ஈரானியர்கள் அங்கு அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

"அமெரிக்காவுக்கு மரணம்; இஸ்ரேலுக்கு மரணம்" என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர். (இ-10)

## கட்டப்பொம்மன் நினைவுக் கோட்டை

சென்னை, ஏப், 16

தமிழகத்தில் பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள வீரபாண்டிய கட்டப் பொம்மன் நினைவுக் கோட்டையை சீரமைக்க தமிழக அரசு 24 லட்சம் ரூபா நிதியை அனுமதித்துள்ளதெனவும் இதற்கான பணிகள் இம் மாத முடிவுக்குள் முடிவடைந்து விடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## உலக அரங்கில்

## அமெரிக்க விமானத் தாக்குதல்: லிபியாவில் நினைவுகூரப்பட்டது

திரிபோலி ஏப். 16

லிபியா மீது அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதலின் 11 ஆம் ஆண்டு தினம் கடந்த திங்களன்று நினைவுகூரப்பட்டது.

1986 ஆம் ஆண்டு கிழக்கு பேர்லின் நகரில் உள்ள டிஸ்கோ அரங்கில் அடையாளம் தெரியாத ஒருவர் வெடிகுண்டு வீசியதில் அமெரிக்கர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்த வெடிகுண்டு வீச்சின் பின்னணியில் லிபியா செயற்பட்டது எனக் குற்றஞ்சாட்டிய அமெரிக்கா லிபியா மீது விமானத் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலின் போது லிபியஅதிபர்கேர்ணல் கடாபியின் வளர்ப்பு மகள் உட்பட 37பேர் கொல்லப்பட்டனர்: 307 பேர் படு காயமடைந்தனர். (இ-10)

## பணயக் கைதிகள் பிரச்சினை நீடிக்கின்றது

பெருநாட்டின் லீமா நகர் பணயக் கைதிகள் பிரச்சினை 125 நாள்களைக் கடந்துள்ளது.

பிரச்சினையை எப்படியாவது ஒரு முடிவுக்குக் கொண்டுவர கியூபா நாட்டின் உதவி கோரப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சை:
# குடாநாட்டிலும் நடத்தக் கோரிக்கை

பருத்தித்துறை, ஏப். 16
பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறித் தெரிவுப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு இப் பரீட்சைக்குத் தோற்ற உள்ள பரீட்சார்த்திகள் தேசிய கல்வி நிறுவன கல்வி முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பரீட்சைக்கு யாழ். குடாநாட்டிலிருந்து தோற்றும் நூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகள் கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் ஒன்றுகூடி இதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி கோரிக்கையாக அனுப்பி வைத்துள்ளனர்.

இதன் பிரதிகள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். அரசாங்க அதிபர், யாழ். வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கும் உரிய நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப் பரீட்சை குறுகிய கால அழைப்பின் பேரில் இம் மாதம் 26 ஆம் திகதி கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இதே நேரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த பல பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் இதுவரை வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அதிபர்களும் பிரதி அதிபர்களுமாக இருப்பதனாலும் —

பரீட்சை நடத்தத் திட்டமிடப்பட்ட தினம் பாடசாலை நாளாக இருப்பதனாலும்—

இவர்கள் கொழும்புக்குப் பரீட்சைக்குச் செல்வதனால் பாடசாலை நிர்வாகமும் பாதிப்படையுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களையும் போக்குவரத்துக்கஷ்டங்களையும் காட்டியே இப்பரீட்சையை இங்கு நடத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-118)

## பருத்தித்துறையில்
# 19 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள்

வடமராட்சி, ஏப். 16
பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் பெண்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 19 பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான தையல் இயந்திரங்களை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலர் ஆ. சிவசாமி வழங்கினார்.

சமூக சேவைகள் திணைக்களம் இந்த 19 தையல் இயந்திரங்களையும் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு இப் புனர்வாழ்வுத் திட்டத்துக்கென அனுப்பி வைத்திருந்தது.

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்களைப் பெற்றுக் கொண்ட இந்த 19 பெண்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுவந்த மாதாந்த உதவிப் பணம் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும் என்றும்—

அதன் பின்பு மாதாந்த உதவிப்பணம் வழங்குவது நிறுத்தப்படும் என்றும் — சமூக சேவை அலுவலர் மு. தர்மலிங்கம் தெரிவித்தார். (இ-173)


உ

## இந்து வாலிபர் சங்கம்
### அல்வாய் முத்துமாரி அம்மன் சனசமூக நிலையம், அல்வாய்.

எமது சனசமூக நிலையத்தில் 14 — 04 — 1997 இல் நடைபெற்ற
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

1 ஆம் பரிசு இல: 727 — துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு இல: 1164 — பெற்றோல்மாக்ஸ்
3 ஆம் பரிசு இல: 126 — சுவர்க்கடிகாரம்.

10 ஆறுதல் பரிசு இலக்கங்கள் :-
1) 310 2) 1092 3) 725 4) 305 5) 06
6) 214 7) 633 8) 542 9) 537 10) 113

★ ஒத்துழைப்பு வழங்கிய நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்து வாலிபர் சங்கத்தினர்.
அல்வாய்.

(46376)



## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய இராம நவமி உற்சவம்

இன்று (16 - 04 - 1997) புதன்கிழமை காலை 8-00 மணி முதல் 1008 சங்காபிஷேகமும் தொடர்ந்து மேளக்கச்சேரியும் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள்:
6-30 மணி:- நாதஸ்வர மேதைகள்
**ஜெகநாதன் குழுவினர்** (உடுப்பிட்டி)
**சதிஸ்குமார் குழுவினர்** (பருத்தித்துறை)

சிறப்புச் சொற்பொழிவு:
பேராசிரியர் **அ. சண்முகதாஸ்**
(கலைப் பீடாதிபதி)
**திருமதி மனோன்மணி சண்முகதாஸ்**

நாட்டிய நடனங்கள்:
பட்டிமன்றம்:
விடயம்:
**இராமனின் மீது மிகையான அன்பு செலுத்தி நிற்பவர்**
**பரதனா? குகனா?**

நடுவர்: சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜ குருக்கள் (B.A.)
(அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டத் தலைவர்)
சுழலும் சொற்போர்
**இராமனின் பெருமைக்கு பெரிதும் துணை நின்றவர்?**

இசை நிகழ்ச்சி:
**யாழ. நகர் அருணா இசைக்குழு**

அதிகாலை நான்கு மணிக்கு எம் பெருமான் சீதா பிராட்டி திருக்கோலமாக முத்துச் சப்பறத்தில் வெளி வீதி உலா வருவார். வடக்கு வீதியில் இராமபிரானின் நாட்டிய நாடகமும், மேளக்கச்சேரியும் நடைபெறும். ஸ்ரீ வல்லிபுரேசன் அடியார்கள் இந்நிகழ்ச்சிகளைக் கண்டு எம் பெருமான் அருள் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஒலி அமைப்பு மேடை: இந்திரதீபம் ஒளி: தம்பியண்ணா

உபயம்: **கற்கோவளம் மக்கள்**

(9520)


## சேவைக்கால பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றில் சாவகச்சேரிக் கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 5 இல் கல்வி கற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் நடைபெறும்.

ஆண்டு ஐந்துக்கான புதிய பாடத்திட்ட ஆசிரியர் கைநூலும் இக்கருத்தரங்கில் வழங்கப்படுமென கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசன் தெரிவித்தார். (இ)

## பாலர் பாடசாலை

யாழ்ப்பாணம், ஏப். 16
இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு குருநகர், புனித செபஸ்தியார் சனசமூக நிலையத்தில் பாலர் பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-5)

## டிப்ளோமா இறுதித்தேர்வு பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப். 16
தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா இறுதித் தேர்வுப் பெறுபேறுகள் (1993-1994) வெளியாகியுள்ளன. பெறுபேறுகளை நிலையத்தில் பார்வையிடலாம் என்று யாழ். வலயம்-1 கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்துக்கல்லூரி நிலையத்திலிருந்து மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 89 ஆசிரியர்களுள் 46 பேர் திறமைச் சித்தியும், 41 பேர் [illegible] துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)


உ
திருநெல்வேலி
அருள்மிகு
## ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோஹண சுவாமி
தேவஸ்தான
### வருடாந்த மஹோற்சவம்

ஸ்வஸ்த்தி ஸ்ரீ நிகழும் ஈசுர வருஷம் சித்திரைத் திங்கள் 5 ஆம் நாள் (18 - 04 - 97) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் துவஜாரோஹணம் (கொடியேற்றம்) நடைபெற்றுத் தொடர்ந்து 19 நாள்கள் மஹோற்சவம் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருவதோடு குறிப்பாக விழா உபயகாரர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

05-05-97 திங்கள் - பஞ்சரதோற்சவம்
06-05-97 செவ்வாய் - தீர்த்தோற்சவம்
07-05-97 புதன் - பூங்காவனம்

குறிப்பு: காலை உற்சவம் 8 மணிக்கும்,
மாலை உற்சவம்3 மணிக்கும் ஆரம்பமாகும்.

ஸ்ரீகாயாரோஹண சுவாமி தேவஸ்தானம்.

(46372)



## ஈசன் கல்வி நிலையம்
K.K.S. றோட், கோண்டாவில்.

தாவரவியல்
**G.C.E. A/L 98, 99**
தாவரவியல் - இழையவியல்
தாழ்வகை தாவரவியல்
துரித வினாவிடை - மீட்டல் வகுப்புகள்
96, 97 நடைபெறுகின்றன.

தனித்துவமான ஆசிரியர்

## தூய/பிரயோக கணிதம்
**G.C.E. A/L 99**
திரு. கருணா
தூய கணிதம் - அட்சர கணிதம்
பிரயோக கணிதம் - இயக்கவியல்
திங்கள்
வெள்ளி ]- 3·30 — 5·30 p.m.

- நிர்வாகி

(46382)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 06 — 06 — 1933



உதிர்வு: 17 — 03 — 1997

### சின்னத்தம்பி செல்வரெத்தினம்
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

எங்கள் குடும்பத்தின் மூத்த சகோதரனாகவும் தெய்வபக்தியும், பண்பும், இன்சொல்லும் மிக்க அண்ணாவாகவும் எம்மை அன்போடும், பண்போடும் பாசத்தோடும் நல்வழி நடத்திய அண்ணா! உங்கள் நினைவு எம் உயிர் உள்ளவரை என்றும் நெஞ்சைவிட்டு அகலாது.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 16-04-97 இன்று புதன்கிழமை திருச்சியில் நடைபெறும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயறுரும்:
மகன், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள்,
பெறாமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

(46378)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி பெண் குளிரில் மரணம் கூடச்சென்றவர் ஜேர்மனியில் கைது

வடபகுதி பெண் ஒருவர் ஜேர்மனிக்குச் சென்ற வழியில் செக்கோஸ்லேவாக்கியா எல்லையில் குளிரில் சிக்கி மரணமான சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண இளைஞர் ஒருவரை ஜேர்மன் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

புவனநாயகி சுப்பிரமணியம் என்னும் 40 வயதுப் பெண்ணே மரணமாகியிருந்தார்.

இந்த பெண்ணுடன் பயணம் செய்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுரேஸ்குமார் சோதிலிங்கம் என்னும் இளைஞன் இந்தப் பெண்ணைக் காப்பாற்றத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் ஜேர்மன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21'3)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவ மொறிஷியாஸ் தயார்!

கொழும்பு, ஏப். 16

''இலங்கையில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மொறிஷியஸ் உதவுவதற்குத் தயார்.

இலங்கைக்கு மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ள மொறிஷியஸ் நாட்டின் பிரதி பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான றேமண்ட் பெரெஞ்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையைப் போன்றே பல இனங்கள் வாழும் மொறிஸியஸில் ஒரு காலத்தில் இனப்பிரச்சினை இருந்து வந்தது. அங்கும் 10 சதவீதமான தமிழ் மக்கள் உள்ளனர். ஆனால் அங்கு இன்று இனப்பிரச்சினை இல்லை என்றார் அவர்.

கொழும்பு ''டிரான்ஸ் ஏசியா'' ஹோட்டலில் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அவர் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் என நம்பப்படுவோர் ஆயுதக்கடத்தல் சம்பந்தமாக மொறிஷியஸில் கைது செய்யப்பட்டது உண்மை என்றார்.

அந்தச் சமயத்தில் தான் எதிர்க்கட்சியில் இருந்ததாகவும் —

கைது செய்யப்பட்டவர்களுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் தொடர்பு இருந்ததா என்பது குறித்து தனக்குத் தெரியாது என்றும் —

எனினும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் புலிகள் இயக்கம் பயன்படுத்தும் ஆயுதவகைகளைச் சேர்ந்தவை என்பது மட்டும் தனக்குத் தெரியும் என்றும் — அவர் குறிப்பிட்டார். (இ 3-5)

# திக்கம் வடிசாலை புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 16

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகளின் ஆலோசனையுடன் திக்கம் வடிசாலையை நவீனமயப்படுத்த வடமாகாண புனர்வாழ்வு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

திக்கம் வடிசாலையில் கிடைக்கும் 'ஸ்பிரிட்'டை நவீன முறையில் வடித்து தரமான சாராயத்தை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்நுட்பத்திறனைப் பெறும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகளின் சிபார்சைப் பெற்று தரமான சாராயத்தை உற்பத்தி செய்து வெளியிடங்களுக்கு அனுப்பவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

# கல்விச் சுற்றுலாவுக்கு யுனெஸ்கோ ஏற்பாடு

அமைதிக்கும், சகிப்புத் தன்மைக்குமான கல்விச் சுற்றுலா ஒன்று யுனெஸ்கோ அமைப்பின் ஆதரவுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

1996 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சையில் '4ஏ' சித்தியைப் பெற்றவர்களே இக்கல்விச் சுற்றுலாவில் பங்கு பற்ற விருக்கின்றனர்.

இக்கல்விச் சுற்றுலாவில் பங்குகொள்ள ஏற்கனவே வலயம் 1, வலயம் 2 கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டவர்களும் —

இதுவரை தொடர்பு கொள்ளாதவர்களும் தமது பெற்றோருடன் இன்று காலை 11-30 மணிக்கு தத்தமது கல்விப்பணிப்பாளர்களைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**வித்துவான் பொன். கனகசபை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அறிவின் ஒளியாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் விளக்கமாய்
பாரினில் வாழ்ந்த பெருந்தகை நீவிர்!
போதும் இவ்வுலகம் என எண்ணி
பெரும் பயணம் மேற்கொண்டு
பொருத்தமான இடம் ஏகி
பாசங்கள் புடை சூழ்ந்திருக்க
உம்பயணம் சென்றீரோ?

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அ. குமாரவேலு குடும்பத்தினர்,
(சகோதரன்)
க. ஆனந்தகுமார் குடும்பத்தினர்.
(பெறாமகன்)

இல. 11, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (46379)

# திருமலையிலிருந்துவரும் பயணிகள் கஷ்டங்களை நீக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 16

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு வரும் அகதிகளும் மற்றும் தனிப்பட்ட பயணிகளும் எதிர் நோக்கும் கஷ்டங்களை நீக்க யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

காங்கேசன் துறை வரும் பயணிகள் அனுபவிக்கும் அசௌகரியங்கள் குறித்து ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் எழுதிய கடிதத்துக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே புதிய நடவடிக்கைகள் தொடர்பாக அரச அதிபர் விளக்கியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

★ மீளக்குடியமர வருபவர்களுக்கு தரமான, போதுமான அளவு உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இவற்றைக் கவனிக்க உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

★ காங்கேசன் துறையில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கான போக்கு வரத்துக் கட்டணம் அறவிடப்படுவது நிறுத்தப்படும். மீளக் குடியமர்வதற்கு வரும் மக்களிடம் மட்டுமே கட்டணம் அறவிடப்படமாட்டாது.

★ மீளக்குடியமர வருபவர்கள் தவிர ஏனைய பயணிகளிடமே பொதிகளுக்கு கட்டணம் அறவிடப்படுகிறது.

★ பயணிகளினால் கொண்டுவரப்படும் பொதிகளை தனியார் லொறிகளில் கொண்டுவர அரச நிதி பயன்படுத்த முடியாது. அதன் காரணமாக மேலெழுந்த வாரியாக பொதி ஒன்றுக்கு ரூபா 50 அறவிடப்படுகிறது. இந்த விடயத்தில் நிதி துஷ்பிரயோகம் இடம் பெறாது இந்த நடைமுறை அமுல் செய்யப்படுகிறது.

★ தினமும் பயணிகள் வந்து கொண்டிருப்பதால், அவர்கள் ஊரடங்கு நேரத்துக்கு முன்னர் வீடுகளுக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக அங்கு பணியாற்றும் அரச ஊழியர்கள் கடுமையாக நடப்பதை தவிர்க்க முடியாதுள்ளது.

எதிர்காலத்தில் இக் குறைப்பாட்டை ஓரளவு தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். (இ-3)

# பிரெஞ்சு நிறுவனத்தின் உதவியுடன் பழம் பதனிடும் தொழிற்சாலை

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். மாவட்டத்தில் பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை பிரெஞ்சு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் நிறுவ முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பழ உற்பத்தியை அபிவிருத்தி செய்யவும் —

நல்லரக கனிமரங்களை இங்கு பயிரிடவும் — முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து இது தொடர்பாக ஆராய்ந்த பிரெஞ்சு நிறுவனத்துடன் இணைந்து பழ உற்பத்தியைப் பெருக்குவதுடன் பழம் பதனிட்டு பொதி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது,

## யாழ். மாவட்டத்தில்

# விவசாயம் கைத்தொழில்களை மீண்டும் ஆரம்பிக்கக் குழுக்கள்

யாழ்ப்பாணம் ஏப். 16

யாழ். மாவட்டத்தில் 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைக்கு விவசாய மற்றும் கைத்தொழில்களை ஏற்படுத்துவது குறித்து ஆராய இருகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இக் குழுக்கள் விவசாயம் மற்றும்சிறுகைத்தொழில்அபிவிருத்தி பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

இந்தச் செயற்பாட்டுக்கு ஐ.நா. அபிவிருத்தி திட்ட ஆலோசனையும் பெறப்படவிருக்கிறது.

ஏற்கனவே இங்கு இயங்கி மூடப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் சிறுகைத்தொழில்கள் ஆகியவற்றைமீள இயங்கச் செய்வதற்கான முயற்சிகளை உடன் எடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## விசேட அ. அட்டை வழங்கும் வேலை

யாழ்ப்பாணம், ஏப்.16

யாழ். குடா நாட்டில் விசேட அடையாள அட்டை வழங்கும் பணி இன்னமும் பூர்த்தியடைய வில்லை.

குடாநாட்டில் பலரும் இதற்கான புகைப் படங்களை எடுத்து விண்ணப்பித்து பல மாதங்களாகியும் இன்னமும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப் படவில்லை.

விசேட அடையாள அட்டை வழங்கவென ஆள் பதிவுத் திணைக்கள அலுவலகம் ஒன்று யாழ். செயலகத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-173)

## குளிர்பானவிலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.16

குடாநாட்டில் 'மிரண்டா', 'பெப்சி' போன்ற குளிர்பானங்களின் விலைகள் இரட்டிப்பாக அதிகரித்துள்ளன.

ஒன்றரை லீற்றர் அளவு கொண்ட இக்குளிர் பானம் கொழும்பில் 50 ரூபாவாக விற்கப்படுகிறது. இதே விலை தான் குளிர்பான பிளாஸ்டிக் போத்தல்களிலும் அச்சிடப்பட்டுள்ளது.

ஆனால் குடாநாட்டில் இக்குளிர்பானங்கள் போத்தல் ஒன்று 90ரூபா முதல் 100ரூபா வரை விற்கப்பட்டு வருகின்றன. (இ-173)

## வடமராட்சி கிழக்கில்

# அரணுக்கு வெளியே உள்ள சங்கக் கடைகள் மூடப்பட்டன

வடமராட்சிக் கிழக்கில் சுமார் 10 சங்கக்கடைக் கிளைகள் மூடப்பட்டுள்ளன.

செம்பியன்பற்றில் இருந்து மணற்காடு வரையில் உள்ள கிளைகளே மூடப்பட்டுள்ளன.

இதனால் இப்பகுதி மக்கள் தமது நாளாந்த உணவுத் தேவைகளுக்கு கஷ்டம் அடைகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள சங்கக் கடைகளே மூடப்பட்டுள்ளன. (இ-36)

## ஊர்காவற்றுறை பாலத்தின் அவல நிலை

தென்மராட்சி, ஏப். 16

தீவகப் பகுதியின் பிரதான இறங்குதுறையான ஊர்காவற்றுறைப் பாலம் உடைந்த நிலையில் உள்ளதாலும் பாலத்தின் அருகில் நீரில் அமிழ்ந்த நிலையில் பெரிய படகு காணப்படுவதாலும் நயினாதீவு, அனலைதீவுக்குச் செல்லும் பயணிகள், படகில் ஏறுவதற்கு பலகையில் நடக்க வேண்டிய நிலைமை இருந்து வருகிறது.

பலவருடங்களாக பாலம் திருத்தப்படாததாலும் — நீரில் அமிழ்ந்துள்ள பாரிய படகு அப்புறப் படுத்தப் படாததாலும் — பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (இ-117)

## நினைவஞ்சலிக் கூட்டம்

திருநெல்வேலி, ஏப். 16

கடமையிலிருந்த வேளையில் சுகவீனமுற்று காலமானவரான தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி என். புவனேஸ்வரனின் உருவப்பட திறப்பு வைபவமும், நினைவஞ்சலிக் கூட்டமும் கடந்த வியாழக்கிழமை இணுவிலிலுள்ள மேற்படி பணிமனையில் நடைபெற்றன. யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் எஸ். மகேந்திரன் அன்னாரின் உருவப்படத்தை சம்பிரதாய முறைப்படி திரை நீக்கம் செய்து வைத்தார். (இ-135)

## காரைக்காட்டு பகுதியில் கசிப்பு

தென்மராட்சி, ஏப்.16

மந்துவில் காரைக்காட்டு பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும் கள்ளு உற்பத்தியும் அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ரியூசன் வகுப்புக்கள் நடத்துவதற்கு ஏற்ற நல்ல நிலையில் உள்ள மேசைகள், வாங்குகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. நவஜீவன், தெணியம்பை, வல்வெட்டித்துறை. [9518]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு: Lucky Farm Sales Centre, Palaly Road, Thirunelvely. [46375]

### தேவை

கோடியல் மற்றும் திருகு மூடியுடன் ஜாம் போத்தல்கள் தேவை. தொடர்பு கொள்ளும் முகவரி:- ரேஸ்றலைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. [46331]

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டிவீதி, மீசாலை. [43756]

### தவறிவிட்டன

தேவேந்திரன் பிரபாகரன் ஆகிய எனது அடையாள அட்டையும் 733400021V, பல்கலைக்கழக அடையாள அட்டையும் திருநெல்வேலிச் சந்திக்கும் முடமாவடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 186/10, சேர்.பொன். இராமநாதன் வீதி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். [46363]

## கிரனேட் வெடித்து சிப்பாய் பலி

மட்டக்களப்பு, சிறைச்சாலை இராணுவ முகாமில், கடந்த சனிக்கிழமை தற்செயலாக ஏற்பட்ட கிரனேட் வெடி விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட நீதிபதி விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார். (இ–5)

## போஷாக்கு புனர்வாழ்வு நிலையம்

யாழ். நகரப் பகுதியில் மேலும் ஒரு போஷாக்கு புனர்வாழ்வு நிலையம் கந்தர்மடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே குருநகரில் இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து கொட்டடி, அரியாலை ஆகிய இடங்களிலும் இந்நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. (இ-173)


மீண்டும் ஆரம்பம்!

**றோசுகி ரெயிலறிங்**

மீண்டும் பழைய இடத்தில் திங்கள் (14-04-97) முதல் ஆரம்பமாகியுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**A. ROSA**

இல.5, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(46367)


## ஓராண்டு நினைவலைகள்



மலர்வு: 18 — 01 — 1927

உதிர்வு: 26 — 04 — 1996

### அமரர் செல்லப்பா முருகையா

**திதி: 16 - 04 - 1997**

எது அவலம்? எத்தனை அவலம்?
ஓ! அந்த நாள். தீபாவளித் திருநாள். வானவெளியில் வாணவேடிக்கை ஏற்றிய தீபத்தை அணைக்காமல் எமது கூட்டை விட்டுப் புறப்பட்டோமே
அது அவலமா?
அகதிகளான இடத்தில் நோய் தீவிரமாகி காலை அகற்றினார்களே அது அவலமா?
முச்சக்கர வண்டியில் உங்களைக் கொண்டு சோதனையோடும் வேதனையோடும் முன்னேறினோமே
அது அவலமா?
தஞ்சமெனச் சேர்ந்த இடத்திலிருந்தும் சுற்றுலாப் புறப்பட்டு திக்கற்றவர்களாக அலைந்தோமே
அது அவலமா?
மயங்கிய உங்கள் நினைவை மீட்க வேணுமே யென்ற ஒரே ஆதங்கத்தோடு திரும்பினோமே கண் விழிப்பீர்களெனக் காத்திருக்க சலனமேயில்லாமல் பிறந்த மண்ணுமின்றி வாழ்ந்த மண்ணுமின்றி கைதடி மண்ணில் சங்கமமானீர்களே கொடூரமான
அவலம் அது தான்.
கூடு பிரிந்தது. சிறகொடிந்தது. ஆதரவற்ற பறவைகள் நாம் அலைகின்றோமே தெரியவில்லையா?
குமுறும் நெஞ்சம் புரியவில்லையா?
வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல்
தவிக்க வேண்டுமா?
தெய்வமாயிருந்து வழிகாட்டமாட்டீர்களா?

நீங்காத சோகத்துடன் கண்ணீர்ப் பூக்களை அஞ்சலியாக்கும்:

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

[9509]

## இறைபதம் குறித்த முதலாம் ஆண்டு நினைவு

ஒளி வளர் விளக்கு



புவியில்: 03 — 09 — 1909

விண்ணில்: 26 — 04 — 1996

முதுபெரும் கல்விமான்

### திருமிகு வி. சிவசுப்பிரமணியம் J.P.

(B A., B.Sc., P G.T , F.R.G.S )
(இளைப்பாறிய அதிபர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

**உமை நினைந்துருகா நாளும் உள்ளதோ எம்மிறைவா?**

தலைவா நீர் எமைப் பிரிந்து
தருந்துயர் ஆண்டாயிற்று
மலைவுறும் எமது உள்ளம்
மாய்ந்திடும் உம் நினைவால்
அலையுறு தெப்பம் போல
ஆயினோம் எமது துன்பம்
கலைவுறு நாளு மென்றோ
கற்பகத் தருவே வாழி!

மனையெலாம் உமது காட்சி
மனமெலாம் உமது தோற்றம்
கனவெலாம் நீரே எங்கள்
கண்களில் உறக்கம் ஏது?
புனைவன நீக்கி நாங்கள்
பொலிவிழந்துள்ளோம் ஐயா!
உமை நினைந்துருகா நாளும்
உள்ளதோ எம்மிறைவா!

**திருமதி சிரோன்மணி சிவசுப்பிரமணியம்**
(மனைவி)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (சி/503)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை நிர்வாக சேவைக்கு பதில் புதிய சேவை உருவாக்கப்படும்

கொழும்பு, ஏப், 16

இலங்கை நிர்வாக சேவை ஒழிக்கப்பட்டு புதிய சேவை ஒன்று உருவாக்கப்படவிருக்கிறது.

மேற்கண்ட முடிவை அரசாங்கம் எடுத்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த முடிவையடுத்து இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்களைத் தெரிவு செய்வதை அரசாங்கம் நிறுத்தியுள்ளது.

புதிய சேவையை உருவாக்குவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சர்களிடம் ஆலோசனை கோரியுள்ளார். (இ-3-150)

### வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் (பிரிவு 268) இன் பிரகாரமான

## அறிவித்தல்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல், வீதியோர எல்லைச்சுவர்கள் அமைத்தல் என்பன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆகவே கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கும், வீதியோர எல்லைச்சுவர்கள் அமைப்பதற்கும் பிரதேச சபையில் இருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும், நெல்லியடி, உடுப்பிட்டி, கட்டைவேலி உப அலுவலகங்களிலும் அறிந்துகொள்ளலாம்.

**செ. ஶ்ரீநிவாஸன்**
**விசேட ஆணையாளர்.**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
1997 - 04 - 07 (சி-505)

## 31 ஆம் நாள் நினைவுப்பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் செல்லையா சீவரத்தினம் (கிளி)

(முன்னாள் ஊழியர் இ.போ.ச., உரும்பிராய் வடக்கு.)

தாயின் மடியில்: **24 — 06 — 1942**

இறைவன் திருவடியில்: **17 — 03 — 1997**

''கண்மணிபோல் காத்த எங்கள் கருத்து நிறை
அப்பாவே!
மண்ணிலே மாண்புடனே வாழவைத்த அப்பாவே!
விண்ணுலகஞ் சென்றனையோ வித்தகனின்
அருகிருக்க
மண்ணிலே வாழுமட்டும் மறப்போமா உன்
நினைவை?''

எங்கள் குடும்ப விளக்கின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அரும்பாடுபட்டுப் பணியாற்றிய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும், சேவையாளர்களுக்கும், பின்னர் அவரின் மறைவின்போது ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் எமது பாசத்திற்குரிய அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்கான 31 ஆம் நாள் பிரார்த்தனையில் பங்கு கொண்டு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.**

ஞான சம்பந்தர் இல்ல வீதி,
உரும்பிராய் வடக்கு. (46373)

# உதயன்

## தீப்பொறியும் நச்சு விதையும்

இனத்துவேஷம் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களை தத்தமது கட்சியிலிருந்து நீக்குவதற்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்காவும் முடிவு செய்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு தலைவர்களும் இது குறித்து தத்தமது கட்சிக் கூட்டங்களில் பேசுகையில் உறுப்பினர்களை எச்சரித்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதில் இரண்டு பிரதான கட்சிகளும் ஒரே அணியில் இணைந்து செயற்படுவது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் ரணில் விக்கிரமசிங்காவும் இம்மாதம் இரண்டாம் திகதி இணக்கம் கண்டனர்.

இனத்துவேஷம் பேசும் எம். பிக்களை கட்சிகளிலிருந்து நீக்குவது என்ற முடிவும் அதன் தொடர்ச்சியாக வந்திருப்பது வரவேற்கத்தக்கும் பாராட்டக் கூடியதுமான நடவடிக்கையாகும்.

தீர்வு ஒன்றில்லாமல் இனப் பிரச்சினை இழுபட்டு, இழுபட்டு இன்றைய மிக மோசமான நிலைக்கு வந்தமைக்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் கக்கிய இனத்துவேஷமே மூலகாரணம்.

இனத்துவேஷ நெருப்பின் பொறியாகவே இனப்பாகுபாடு இந்த நாட்டை சுட்டது. தமிழர்களின் மொழி உரிமை மறுக்கப்பட்டதுடன் ஆரம்பமான இனப் பாகுபாடு, வேலைவாய்ப்பு—உயர்கல்வி வசதி மறுப்பு, நில உரிமை பறிப்பு என்று தமிழர் வாழ்வில் பலதுறைகளையும் ஊடறுத்துப் பொசுக்கியது,

தமிழர்களுக்கு ஒரு சில உரிமைகளை சொற்ப அளவில் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதெல்லாம் அவற்றுக்குத் தடைபோட்டுச் சாம்பராக்கியது இனப் பாகுபாட்டினதும், இனத்துவேஷத்தினதும் மற்றொரு தீப்பொறி.

இரண்டு பிரதான கட்சியினரும் மாறி மாறி, ஏட்டிக்குப் போட்டியாக விதைத்த இனத்துவேஷம், இனப்பாகுபாடு ஆகிய இரண்டு நச்சுவிதைகள் இந்த நாட்டில் வளர்ந்து நச்சுக் காற்றை வீசுகின்றன.

அடுத்தடுத்து வந்த சந்ததிகள் இந்த நச்சுக் காற்றைச் சுவாசித்து வளர்ந்ததன் காரணமாக இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காணமுடியாத சாபக்கேடு தொடர்கிறது.

இன்றைய தலைவர்கள் இருவரும் இனத்துவேஷம் நாட்டுக்குச் செய்த கொடுமையை உணர்ந்து செயற்பட முனைந்திருப்பது இனப் பிரச்சினை விவகாரத்தில் இரண்டாவது திருப்பு முனை எனலாம்.

இனத்துவேஷத்தை முதலீடாக வைத்து அரசியல் நடத்தியவர்கள், பதவியைப் பிடித்தவர்கள், அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் முந்திய அரசியல் தலைவர்கள் பரம்பரையினர். அந்த வகை அரசியலுக்கு முழுக்குப்போட்டு, அதனை ஒழிப்பதற்கு இன்றைய தலைவர்கள் இருவரும் மனங்கொண்டிருப்பது மீண்டும் ஒரு நல்ல சமிக்ஞையாக வந்திருக்கிறது.

# ஆரோக்கியமான சமூகம் உருவாக நுகர்வோர் விழிப்புணர்வு அவசியம்

## மீளக் குடியேறி ஒருவருடமாகியும் உருப்படியாக ஏதும் இல்லை

"என்று திருந்தும் எங்கள் யாழ். குடாநாடு?" என்ற தலைப்பில் யாழ்ப்பாண நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பு இங்கு பிரசுரமாகி உள்ளது.

வலிகாமத்தில் மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்து சுமார் ஒரு வருடகாலமாகின்றது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது நிலைமை சீராகி விட்டது போலவும் பொருள்கள் தாராளமாகவும், நியாயமான விலையிலும் கிடைப்பது போலவும் தோற்றம் தருகிறது. யாழ்ப்பாணம் வந்து செல்லும்உயர் அதிகாரிகளும் அப்படியே நம்புகின்றனர்.

உண்மையில் நுகர்வோர் நலனைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது பல குறைபாடுகளை அறிய முடிகின்றது இவற்றைக் மக்களுக்கு அறியத்தருவது நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தின் கடமையாகும்.

**1. பொருள்களின் விலை உயர்வும், தட்டுப்பாடும்:-**

**அரிசி**

அத்தியாவசிய நுகர்பொருளாகிய குத்தரிசி இன்று சந்தையில் கிலோ 38 ரூபா தொடக்கம் 40 ரூபா வரை விற்கப்படுகின்றது.

**சீனி**

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் சீனி கிலோ36ரூபாவாகவிற்கப்படுவதுடன் தனியார் விற்பனை நிலையங்களில் இதைவிட கூடிய விலைக்கே விற்கப்படுகின்றது.

**உள்ளி**

தற்போது யாழ்ப்பாணத்தில்''தட்டுப்பாடான பொருளாக'' உள்ளி காணப்படுகின்றது. உள்ளி கிலோ 220 ரூபாவுக்கும் மேலாக விற்கப்படுகின்றது.

**சிமெந்து**

50 கிலோ சிமெந்துப் பக்கெட்டின் விலை கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தில் 530 ரூபா ஆகவும் ஏனைய வர்த்தக நிலையங்களில் 530 ரூபா முதல் 570 ரூபா வரையிலும் வேறுபட்ட விலைகளில் விற்கப்படுகின்றது.புனர்வாழ்வு, புனர் நிர்மாண பணிகளுக்கு அத்தியாவசியமான சிமெந்து கொழும்பு விலையைவிட இரட்டிப்பு விலைகளில் அரச கூட்டுத்தாபனங்களிலேயே விற்கப்படுவதை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்?

**பெற்றோல்**

நீண்ட காலமாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பெற்றோல் விநியோகம் 8-4-1997 தொடக்கம் எரிபொருள் நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பித்திருக்கின்றது. ஆனால் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 77 ரூபா ஆகும். மண்ணெண்ணெய்யைக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றோலுக்கு கொழும்பிலும் பார்க்க மிக அதிக விலையை அறவிடுகின்றது.

**குளிர்பான வகைகள், பிஸ்கெட்**

மிரண்டா போன்ற கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் பான வகைகள் 95 ரூபா முதல் 100 ரூபா வரை விற்கப்படுகிறது. மாறி பிஸ்கெட் 2 கிலோ பெட்டி 240 ரூபா முதல் 280 ரூபா வரை விற்கப்படுகின்றது. [illegible] பிஸ்கெட்டும் மிரண்[illegible] யாழ். மக்களுக்கு இன்றும் ஆடம்பரப் பொருள்களாகத் தான் உள்ளனவா?

மேற்குறிப்பிட்டவை சில அத்தியாவசியப் பொருள்களின் திடீர் விலையேற்றத்துக்கான உதாரணமே. ஆனால் காலத்துக்குக் காலம் ஏதோ ஒரு வகைச் சுழற்சி முறையில் பொருள்கள் சில ''தட்டுப்பாடாக்கப்பட்டு'' மிகக் கூடிய விலைக்கு விற்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. கப்பற் போக்குவரத்துச் சிரமம் எப்போதுமே காரணமாகக் காட்டப்படுகின்றது. யாழ்ப்பாணத்துக்கு பாவனைப் பொருள்களின் தடையற்ற தொடர் விநியோகம் என்பது என்றுமே நடைமுறைப்படுத்தப்படாதா?

**2. பொருள்களின் தராதரம், அளவு, விலை பற்றிய இன்றைய நிலை.**

பொருள்களின் தரம், அளவு, விலை என்பவற்றிலே அதிக அக்கறை செலுத்த வேண்டிய நுகர்வோர் இன்னமும் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டாலே போதும் என்ற நிலையிலிருந்து மாறாதிருக்கின்றனர்.

இதனால் தரம், அளவு பற்றிய உணர்வே ஏற்படுவதில்லை. உதாரணமாக இன்று யாழ்ப்பாணத்தில் பாணின் தராதர நிறை 350 கிராம்தான் எனக் கூறப்படுகின்றது. அதன் விலையும் ரூபா 8 ஆகவுள்ளது. யாழ். குடாநாட்டைத் தவிர்ந்த இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் பாணின் தராதர நிறை 450 கிராமாகவும் அதன் விலை 7 ரூபாவாகவும் இருக்கும் போது யாழ். குடாநாட்டில் மட்டும் ஏன் இந்த நிலையெனப் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பேக்கரி உரிமையாளர்கள், விலைக்கட்டுப்பாட்டாளர் ஆகியோருடன் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் கலந்தாலோசித்தும் எந்தவித முன்னேற்றமும் இல்லை. 350 கிராம் எனக் கூறப்படும் அந்தப்பாண் கூட நிறுத்துப் பார்க்கும்போது 305 கிராமிலிருந்து 325 கிராம் வரையில்தான் உள்ளது. பாணைக் கூட நிறுத்துத்தான் வாங்க வேண்டிய நிலை உருவாகினாலும் ஆச்சரியமில்லை.

**3. மக்களுக்கான சேவைகளின் நிலை:**

**தபாற்சேவை**

யாழ்ப்பாணத்தில் இன்னமும் சீரழிந்த நிலையில் இருப்பது தபாற்சேவையே. யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையிலான தபாற்சேவை கப்பல் மார்க்கமாகவும், விமானமார்க்கமாகவும் நடைபெறுவதாகக் கூறப்பட்டாலும் கடிதங்கள் மாதக்கணக்கில் பிந்தியே விநியோகிக்கப்படுகின்றன. தபால்களுக்குரிய அவசரத்தன்மை, முக்கியத்துவம் என்பன யாழ் குடாநாட்டிற்குரிய தபாற்சேவையில்இல்லை. மாதக்கணக்கில் கப்பலின் அடியில் தேங்கிக் கிடந்து ஏனோதானோ என்ற அடிப்படையில் என்றோ ஒரு நாள் அவை இறக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுவது இன்றைய வழக்கமாகிவிட்டது. அவசரக்கடிதங்களை கொழும்புக்குப் பிரயாணம் செய்யும் தனிநபர்கள், நண்பர்கள் கையில்கொடுப்பதும், பெறுவதும் தான் நடைமுறையில் யாழ். மக்கள் இன்னமும் கடைப்பிடிக்கும் தபாற் போக்குவரத்து முறையாகும்.

**கப்பற் பிரயாணமும் கட்டண அதிகரிப்பும்:**

குடாநாட்டில் வாழும் சாதாரண வறிய மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வதாயின் கப்பல் மார்க்கமாகவே செல்ல முடியும். கப்பலில் செல்பவர்கள் பிரயாணிகளாகவே கருதப்படுவதில்லை. காங்கேசன் துறைமுகத்தில் பிரயாணிகள் நிற்பதற்கோ, இருப்பதற்கோ எந்த நிழலும் இல்லை. குடிலும் இல்லை.கொண்டு வந்த உணவை வைத்து உண்பதற்கே இடமில்லாத நிலை.

சரி இவற்றை விடுவோம். கப்பல் கட்டணம் ஏன் இப்படித் திடீரென அதிகரிக்கப்பட வேண்டும்? ஆரம்பத்தில் திருமலைக்கும் — காங்கேசன் துறைக்குமான கப்பற் கட்டணம் ரூபா 100 ஆக இருந்தது. இபபோழுது கப்பலுக்கு ஏற்றபடி அதிகரிக்கப்பட்டு 600 ரூபா, ரூபா 750, ரூபா 1,000 என்ற வேறுபட்ட கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. பணம் உயர்வதற்கேற்ப சேவையின் தரமும் அதிகரிக்கப்பட வேண்டுமல்லவா? அல்லற்பட்டுச் சீரழிந்து போயிருக்கும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு அரசு செய்யும் புனர்வாழ்வும் புனர்நிர்மாணமும் இப்படித்தானா அமைய வேண்டும்?

**மீளக் குடியமர்விற்கான கொடுப்பனவுகள்:**

மீளக் குடியமரும் மக்களுக்கான கொடுப்பனவாக ரூபா 5,000 வழங்கப்படுமென அரசு அறிவித்து ஒரு வருடமாகியும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு அவை ஒழுங்காகக் கிடைக்கவில்லை. ஒருசில கிராமசேவகர் பிரிவுகளில் மட்டும் சிலருக்கு வழங்கப்பட்டது. பின் அவை பற்றிய நடவடிக்கைகளைக் காணோம் எங்கு தடை? ஏன் தாமதம்? ஏதுவுமே புரியவில்லை.

**பாராட்டப்படவேண்டிய மண்ணெண்ணை விநியோகம்.**

மீளக்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர அவர்களிடம் யாழ்.நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் முறையிட்டதற்கிணங்க இன்று யாழ்ப்பாணத்தில் எதுவித தட்டுப்பாடுமின்றி கட்டுப்பாட்டு விலையில் தாராளமாகக் கிடைக்கும் ஒரே பொருள் மண்எண்ணெய்யே. மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பாக இருந்த தடைகளை நீக்கி சிறப்பாக விநியோகம் செய்ய உழைத்த அதிகாரிகள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

யாழ்ப்பாணத்தில்வேறு சில அத்தியாவசியமற்ற பொருள்களும் 'தட்டுப்பாடில்லாமல்' இருக்கின்றன. கொழும்புமது பானங்கள் தாராளமாக உயர்ந்த விலையில் எங்கும் (அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் மட்டுமல்ல) கிடைக்கின்றன.இதேபோல்குடிசைக் கைத்தொழிலாக 'கசிப்பு வியாபாரமும்' களைகட்டியுள்ளது. இதனால் ஏற்படும் சமூகச்சீர்கேடுகள் பற்றிப் பல முறை எடுத்துக் கூறப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.கலால்பிரிவை இயக்கவைக்க ஏன் செயலகம் தயங்குகிறது?

இவையெல்லாம் இப்படி இருந்தாலும் பாராட்டப்பட வேண்டிய சில விடயங்களும் இருக்கின்றன. யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தை நாம் அமைத்தபோது வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரியானசோமபால குணதீர எமது முயற்சியைப் பாராட்டியதோடு எமக்கு உரிய அங்கீகாரத்தையும் அளித்தார். யாழ். செயலகத்தில் யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் ஒவ்வொரு மாதமும் அரச அதிபருடன் சந்தித்து பிரச்சினைகளைக் கலந்தாலோசிக்க வகைசெய்தார்.

நுகர்வோர் நலனைக் கருத்தில் கொண்டு கடமையுணர்வுடன் நடவடிக்கை எடுக்கும் ஒருசில அரச உத்தியோகத்தர்கள் இன்னும் எம் மத்தியில் இருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயம். யாழ். மாவட்ட மருந்து, உணவுக் கட்டுப்பாட்டதிகாரி ரீ. மகாதேவன் அண்மைக் காலங்களில் துணிவுடன் பல நடவடிக்கைகளைச் செய்தமை பாராட்டுக்குரியது. தடை செய்யப்பட்ட மருந்துகள், பாவனைக்கு உதவாத காலாவதியான மருந்துகள், கலப்படப் பொருள்கள் பலவற்றை விற்பனை நிலையங்களில் கண்டு பிடித்து தக்க நடவடிக்கை எடுத்துள்ளார். பொதுச் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் செயல்களுக்கு எதிரான அறிவுறுத்தல்கள் விடுத்துள்ளார். இவரது முன்னுதாரணத்தை ஏனைய அரச அதிகாரிகளும், ஊழியர்களும் எப்போது பின்பற்றப் போகிறார்கள்? குறிப்பாக யாழ். செயலகத்தில் இருக்கும் உள்நாட்டு வர்த்தகப் பிரிவு, கலால் திணைக்களம் போன்ற பிரிவுகள் எப்போது மக்களுக்காக உண்மையாக இயங்கப் போகின்றன?

ஒரு காலத்தில் கடமையுணர்வு மிக்க அரச ஊழியர்களையும், விழிப்பான நுகர்வோரையும்,நியாயம்தவறாத வர்த்தகர்களையும், சிறந்த கூட்டுறவாளர்களையும் கொண்டிருந்த யாழ்ப்பாணம் இன்று அதற்கு நேர்மாறான நிலையை எய்தியதுஎவ்வாறு?

நுகர்வோர் விழிப்புணர்வு பெற்றால் மட்டுமே ஓர் ஆரோக்கியமான சமூகம் மீண்டும் யாழ். குடாநாட்டில் உருவாகும் என எதிர்பார்க்கலாம். (இ)

## அ. அட்டை விநியோகம்

வண்ணார்பண்ணை வடமேற்கு கிராம சேவை அலுவலர் (ஜே. 97) பிரிவில் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோர் தங்களுக்குரிய அடையாள அட்டைகள் தயாராகி விட்டனவா என்பதை நாளை கிராம சேவையாளர் அலுவலகத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்றும்—

அடையாள அடைகள் தயாரானோர் அவற்றை நாளை மறுதினம் (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12.00 மணிக்கு முன் நல்லூர் பிரதேச அலுவலகத்துக்கு வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்—

சம்பந்தப்பட்ட கிராம சேவை அலுவலர் தெரிவித்துள்ளார். (உ)

## நாளை

**சித்திரை 4**

**வியாழக்கிழமை**

**திதி:** தசமி

மாலை 6. 24 வரை

**நட்சத்திரம்:** ஆயிலியம்

முற்பகல்: 10.46 வரை

சுபநேரம்: 7. 34-9.04

ராகுகாலம்: 1.34- 3.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டாக்டர்கள் நாளை முதல் மீண்டும் மூன்று நாள்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஏப். 16

சம்பள உயர்வு கோரி அரசாங்க டாக்டர்கள் மூன்று நாள் வேலை நிறுத்தத்தை நாளை ஆரம்பிக்கவுள்ளனர் என அரச மருத்துவர்களின் சங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் அரசாங்க மருத்துவர்கள் மேற்கொண்ட ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை அடுத்து நடைபெற்ற பேச்சுக்கள் முறிவடைந்ததைத் தொடர்ந்து நாளையிலிருந்து மூன்று நாள்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது எனத் தீர்மானிக்கப்பட்டதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சாதாரணமாக மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சைகள் வெளி நோயாளர்களுக்கான சிகிச்சைகள் போன்றவை வேலை நிறுத்த சமயம் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும்—

ஆனால் அவசர சிகிச்சைப் பிரிவு, விபத்து சேவைப் பிரிவு ஆகியன வழமை போல் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள அரசாங்க ஊழியர்களில் அரசாங்க மருத்துவர்களே அதிக சலுகைகளை அனுபவிக்கிறார்கள் எனவும்—

அரசாங்கம் வழங்கும் சம்பளத்திற்கு மேலதிகமாக தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்ய அவர்களுக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது எனவும்—

சுங்க வரி இன்றி வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சலுகை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும்—

அரசுத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## கோணேசர் ஆலய...

(முதலாம் பக்கத் தொடர்)

எடுக்கப்பட்டன.

நேற்றுக் காலை ஆரம்பமான இந்தப்பணி நண்பகல் 2 மணி வரை நீடித்தது.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இக்குருக்களின் உதவியாளராகப் பணியாற்றிய வெங்கடராமன் பாலமுரளி என்னும் மற்றொரு ஐயர் திருகோணமலைப் பொலீஸில் வாக்கு மூலம் ஒன்றை அளித்தார்.

அதில் அவர் தெரிவித்ததாவது:

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் 96 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை கோணேசர் ஆலயத்தில் பிரதம குருக்கள் வியாகேஸ்வர சர்மாவுக்கு உதவியாளராகப் பணியாற்றினேன். அவரது விடுதியில் ஒருபக்க அறையில் நானும் வசித்துவந்தேன்.

குருக்களும், அவரது மனைவி அம்பிகாவும், அவர்களது கைக் குழந்தையும் அங்கு வசித்து வந்தார்கள்.

குருக்களுக்கும் அவரது மனைவிக்கும் இடையில் அடிக்கடி சண்டை இடம் பெறுவது வழக்கம். இருவருக்கும் இடையில் மனஸ்தாபம் இருந்து வந்தது.

கடந்த வருடம் மே மாதம் 13 ஆம் திகதி பகல் 11.30 மணியளவில் நானும், குருக்களும் சேர்ந்து. குசினியில் இருந்த அம்பிகாவை தூண்டில் கயிற்றால் அவரது கழுத்தை இறுக்கிக் கொலை செய்தோம். அதன் பின் குருக்கள் பகல் பூசைக்காக கோயிலுக்குச் சென்று விட்டார்.

பூசை முடிந்து வீடுவந்த அவரும், நானும் சேர்ந்து விடுதியின் பின்பக்கம் உள்ள சுவருக்கு அருகில் குழி தோண்டி அதில் சடலத்தைப் போட்டு மூடினோம் — என்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து திருகோணமலை பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் கொலின் உடனடியாக குருக்களின் விடுதிக்கு பொலீஸ் காவல் போட்டார்.

சம்பந்தப்பட்ட குருக்கள் தற்சமயம் யாழ்ப்பாணத்தில் தாவடி காளி கோயில் பகுதியில் உள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து, யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் உதவியுடன் இவரைக் கைது செய்ய பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கோண்டாவிலைச் சேர்ந்த இக்குருக்கள் கடந்த வருடத்தில் ஒரு நாளில் திருகோணமலைக்கு வந்து தனது இரண்டரை வயதுக் குழந்தையை திருகோணமலையில் உள்ள அன்பு இல்லத்தில் ஒப்படைத்திருந்தார் என்றும் —

அதன்பின்னர் இவர் கடந்த தை மாதம் திருகோணமலைக்கு மீண்டும் வந்து தனது பிள்ளையை அன்பு இல்லத்தில் இருந்து வாங்கிக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார் என்றும் —

பொலீஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குருக்களை உடன் கைது செய்ப நடவடிக்கை எடுக்குமாறு திருமலை நீதிவான் பி. சொர்ணராஜ் உத்தர விட்டார்.

வாக்குமூலம் அளித்த வெங்கடராமன் பாலமுரளி பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இன்று இவர் திருகோணமலை நீதிவான் முன் ஆஜர் செய்யப்படவிருக்கிறார்.

இச் சம்பவம் திருகோணமலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை—

கோணேசர் ஆலய பூசைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்றும் —

ஆலய குருக்களின் விடுதி கோயிலுக்கு சற்று வெளியே உள்ளதால் ஆலய பூசைகள் பாதிக்கப்படவில்லை என்றும்—

ஆலய பரிபாலன சபைத் தலைவர் எம். கே. செல்வராசா தெரிவித்தார்.

திருகோணமலை 'பிரடெரிக்' கோட்டைக்கு உள்ளே குன்றின் உச்சியில் திருக்கோணேசர் ஆலயமும், அதன் அருகே குருக்களின் விடுதியும் உள்ளன.

'பிரடெரிக்' கோட்டை முழுவதும் படைத்தளம் [illegible] பில் வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-3-150)


ORDINATION SERVICE

திருநிலைப்படுத்தல் ஆராதனை அழைப்பு

கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தின் போதகர்களாக சகோதரர்கள் திரு. மா. மோகன், திரு வீ. கனகராஜா என்போரை திருநிலைப்படுத்துகின்றோம்.

நாள்: 18 - 04 - 97 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி (புதிய நேரம்)
இடம்: கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்.

89, பிறவுண் வீதி, கொக்குவில்.

ஆராதனையில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை மிக்க விநயமாக வேண்டுகின்றோம்.

தங்கள் அன்புள்ள,
போதகர், மூப்பர், ஊழியர், விசுவாசிகள்.

பிறவுண் வீதி,
கொக்குவில்.
(9522)


## மரண அறிவித்தல்

### சனகசபாபதிக்குருக்கள் வரதாம்பிகை

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட கனகசபாபதிக்குருக்கள் வரதாம்பிகை 15-04-97 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் மு. கனகசபாபதிக்குருக்கள் (முன்னாள் பிரதம குருக்கள் பரமேஸ்வரன் ஆலயம், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், கருணாகரேஸ்வரி, செந்தில்நாதசர்மா (நகைவாணிபம்), குகநேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருஞானசம்பந்தசர்மா (ஸ்ரீமுருகன் ஜோதிட நிலையம், நல்லூர்), ஊர்மிளாதேவி, சோமாஸ்கந்தசர்மா (விரிவுரையாளர், நுண்கலைக்கழகம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜோதிநாத குருக்கள், சோமநாதசர்மா (கண்ணன்), பவானி, சுகந்தினி, செந்தினி, காலஞ்சென்ற பிரவீணா மற்றும் பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-04-97) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க.செந்தில்நாதசர்மா
(மகன்)

361, கோயில் வீதி,
நல்லூர்.
(46385)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

# அரச உயர் பதவிகளுக்கு இனி போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு

கொழும்பு, ஏப். 16

அரச உயர் பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கு திறந்த போட்டிப் பரீட்சை நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அண்மையில் நடந்தநாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவையில் இருந்தே இதுவரை காலமும் அமைச்சுச் செயலாளர்கள் போன்ற அதி உயர் அரச பதவிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டு வந்தது.

நிர்வாக சேவைக்கு வெளியே உள்ள இளம் சமூகத்தினருக்கும் வாய்ப்பு அளிப்பதற்காக திறந்த போட்டிப்பரீட்சை மூலம் ஆள்களை திரட்டுவது என அரசு கொள்கையளவில் ஏற்கனவே முடிவு செய்திருந்தது தெரிந்ததே. (உ-3-150)

## பிந்திய செய்தி

## வேலைநிறுத்தம் வாபஸ்?

கொழும்பு, ஏப். 16

அரச மருத்துவர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டிக்கும் இடையில் நேற்றிரவு நடைபெற்ற இறுதி நேர பேச்சுக்களை அடுத்து டாக்டர்கள் தமது வேலை நிறுத்தத்தை தற்காலிகமாகக் கைவிட இணங்கியிருப்பதாக நேற்று நள்ளிரவு வெளியான செய்தி ஒன்று தெரிவித்தது.

(உ-3)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளது.

இந்த விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்கள் ஒதுக்கப்பட்ட தினங்களில் காலை 7 மணிக்கு யாழ். செயலகத்தில் சமுகமளிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக்கு அழைக்கப்பட்ட 61 பேர் நேற்று தமது பதிவுகளை யாழ். செயலகத்தில் செய்தனர். (உ-3)

## வாசுதேவா...

(முதலாம் பக்கத் தொடர்)

அக்கட்சி தற்போது ஆட்சியில் உள்ள பொதுமககள் ஐக்கிய முன்னணி அரசில் இடம் பெற்றிருக்கின்றது என்பது தெரிந்தவையே.

வாசுதேவ நாணயக்கார நவசமசமாஜக் கட்சித்தலைவராக முன்னர் இருந்த சமயம் அக்கட்சிக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன எனக் கூறப்பட்டது. உ-3-150)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஐ. தே. கட்சி வெற்றியீட்டியது தெரிந்ததே.

கொழும்பு மேயர் கருஜெயசூரியா கொழும்பு மாநகர சபையில் வைத்து முன்னாள் நீதியரசர் கே. எம். எம். பி. குலதுங்க முன்னிலையிலும்—

ஏனைய ஐ. தே. கட்சி உறுப்பினர்ளும் ஜே. வி. பி. மற்றும் நவசமசமாஜக் கட்சி உறுப்பினர்களும் மேயர் முன்னிலையிலும்—

சத்தியப்பிரமாணம்செய்து கொண்டனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவுடன் போட்டியிட்டு வெற்றியீட்டிய— கே. கணேசலிங்கம் தலைமையிலான சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த — உறுப்பினர்கள் மேல்மாகாணசபை முதலமைச்சர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (உ-3-10)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அகதிகள் வவுனியாவுக்குள் வந்து சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறு வந்த அகதிகள் உடனடியாக திருகோணமலையூடாக யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர்; அல்லது நலனோம்பு நிலையங்கள் என்ற பெயரில் வவுனியாவில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர் என்பது தெரிந்ததே.

அவர்களுக்கு இதுவரை காலமும் உணவு கொள்வனவு செய்வதற்காக நிதி உதவி வழங்கப்பட்டுவந்தது.

ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஐம்பது ரூபா அல்லது ஒரு குடும்பத்துக்கு ஒரு நாளைக்கு இருநூற்றியைம்பது ரூபா என்ற அடிப்படையில் உதவி வழங்கப்பட்டு வந்தது

யாழ்ப்பாணத்துக்கு திரும்பிச் செல்லும்படி கொடுக்கப்பட்ட நெருக்குதல்களினால் — வவுனியா வந்த அகதிகளில் — இதுவரை நாற்பதாயிரம் பேர் வரை திருகோணமலை ஊடாக யாழ். சென்றுவிட்டனர்.

இன்னும் 20 ஆயிரம் பேர் கடந்த ஆறுமாத காலமாக வவுனியா முகாம்களில் உள்ளனர்.

தாங்கள் சிறைக் கைதிகள போல் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் —

தாங்கள் வெளியே விரும்பிய இடங்களுக்கு சென்று வருவதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் —

அவர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

அவர்களுக்கு உணவுகொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டு வந்தநிதி இனிமேல் வழங்கப்பட மாட்டாது; உலர் உணவு நிவாரணமே இனிமேல் வழங்கப்படும். உலர் உணவுப் பொருள்களைக் கொண்டு அகதி முகாம்களிலேயே — அவர்கள் தாமே — சமைத்து சாப்பிட வேண்டும்

ஆனால் அகதி முகாம்களில் அதற்குரிய வசதிகள் இல்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது. உணவு நெருக்கடியும்சேர்ந்து கொண்டால், வவுனியாஅகதி முகாம்களில் தங்கியிருக்கும் எண்ணத்தைக் கைவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிச்செல்வதற்கு அகதிகள் இணங்குவர் என எதிர்பார்க்கப்படுகின்றதாம்.

இந்த அகதிகளுக்கு போதுமான உதவிகள் வழங்கப்படுவதில்லை எனவும் —

இயன்ற விரைவில் அவர்களது சொந்த இடங்களுக்கு அவர்களை அனுப்புவதில் அதிகாரிகள் முழுமூச்சாக இருப்பதாகவும் —

உதவி வழங்கும் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிகளிலிருந்து அடுத்த சில தினங்களில் மேலும் பல்லாயிரக் கணக்கானோர் வவுனியா வந்து சேருவர் என எதிர்பார்க்கப்படுவதாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் குறிப்பிட்டார்.

(உ-3-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org